



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (10.03.2025) நெம்மேலியில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

## ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து

# குளித்தலையில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

### அமைச்சர் வி.செந்தில் பாலாஜி – தமிழன் பிரசன்னா சிறப்புரை!

கரூர், மார்ச் 12 –

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக் கிணங்க தொகுதி மறு சீரமைப்பு மும்மொழிக் கொள்கை என தமிழை அழிக்க நினைக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து இன்று குளித்தலையில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றுகிறார்.

கரூர் மாவட்ட திமுக சார்பில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும், தொகுதி சீரமைப்பு என்ற பெயரில் நாடாளுமன்ற தொகுதி குறைப்பு, மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தி திணிப்பு என தமிழை அழிக்க நினைக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் குளித்தலை பேருந்து நிலையம் அருகில் இன்று (12ம் தேதி – புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது. மாவட்டக் கழக அவை தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில், கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி, எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், பிஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, தலைமைக் கழகப் பேச்சாளர் தமிழன் பிரசன்னா சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்டத் துணைச் செயலாளர் பூவை ரமேஷ்பாபு வரவேற்புரையாற்ற, மாவட்டத் துணைச் செயலாளர் மகேஸ்வரி சுப்பிரமணி நன்றியுரையாற்றுகிறார். கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி (முன்னாள் எம்.பி.), நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், தொழிலாளர் அணி துணை செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், வர்த்தக அணி துணைச்செயலாளர் வேபல்லவி ராஜா, செயற்குழு உறுப்பினர் குளித்தலை சிவராமன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ. ராமர், (முன்னாள் எம்.எல்.ஏ.), குளித்தலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் அ.சந்திரன், தோகைமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜி அண்ணாதுரை, குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், மருதூர் பேரூர் செயலாளர் இ ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.கருப்பையா, பிபி..சரவணன், இ.ஜாபருல்லா, மாவட்டத் துணைச் செயலாளர் எம்.எஸ்.கே. கருணாநிதி,

செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர்.எஸ் .ராஜா, மத்திய மேற்கு பகுதி செயலாளர் ஆர். ஜோதிபாசு, மத்திய கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்எஸ்.மணியன், கே.கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ.சந்திரன், கே.ரவிராஜா, கே.பாஸ்கரன், எம்.ராமலிங்கம், எஸ்.சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி.வளர்மதி, பி.முத்துக்குமாரசாமி, வி.கே.வேலுசாமி, புகழூர் நகர கழக செயலாளர் நகர்மன்ற தலைவர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ். ஆறுமுகம், வி.கருப்பண்ணன், விகேடி ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே.சாமிநாதன், சி.கருப்பையா, பி.பி. சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே.முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ். மணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு. எஸ்.சக்திவேல், ஆர். ஜி.சரவணமூர்த்தி, ஜிம்.எம்சிவா, கே நந்தினிதேவி, கே.தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி.மோகனசுப்பு, பழ. அப்பாசாமி, எம்.ப்ரின்சி, சி.நவாஸ்கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி எஸ்.மனோகர், எம்.ஆர்.எஸ்.சுரேஷ், பங்க் கேசுப்பிரமணி, விஆர். அண்ணாவேலு, அரசு வழக்கறிஞர் என் செந்தில்குமார், பள்ளபட்டி டி.எம்.பஷீர் அகமது, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் பி. காமராஜ், எஸ் காமராஜ், மற்றும் இரா.பிரபு, ஆர்.ராமசாமி ஆர் கந்தசாமி கா.அன்பரசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏ. கனகராஜ், சிகே.ராஜா, எம்.பாபு, ஜிவிஅருண், யுவராஜ், மாநகர இளைஞரணி பி.பூபதி, வழக்கறிஞர்கள் இரா குடியரசு, பி.லட்சுமணன், டி.பிச்சைமுத்து, டி .ராஜேஸ்வரி, டி நீலமேகம், கே.எம்.சாகுல் ஹமீது, என்.பி.ரமேஷ், எஸ். பாலசுப்பிரமணியன்,

மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர். கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில்

# யானை தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு அரசு நிவாரணம்!

### தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

*நீலகிரி, மார்ச் 12-*

*நீலகிரி மாவட்டம், குன்னூர் ஆடர்லி சேம் பக்கரை பகுதியில் வசித்து வரும் குரும்பர் இனத்தைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 33), 9.3.2025 அன்று இரவு சுமார் 8.45 மணி அளவில் ஆர்டர்லி பேருந்தில் இருந்து இறங்கி வீட்டிற்கு நடந்து செல்லும் வழியில் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.*

*செய்தியினை கேள்விப்பட்ட குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு அரசின் தலைமை கொறடாவுமான கா.ராமச்சந்திரன் குன்னூர் லாலி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று இறந்தவரின் உடலுக்கு மரியாதை செலுத்தி, இறந்தவரின் குடும்பத்திற்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.*

*தமிழ்நாடு அரசின் சார்பில் தற்போது நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் வன விலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் வழங்கப்படுகிறது.*

*மேலும் இறுதி சடங்கிற்கு முன்பணமாக ரூபாய் 50 ஆயிரத்திற்கான தொகையினை குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் தலைமை அரசு கொறடா கா. ராமச்சந்திரன் வனத்துறை அதிகாரிகள் முன்னிலையில் இறந்தவர் குடும்பத்தினருக்கு வழங்கினார்.*

*மேலும் அவர் தெரிவிக்கையில் மீதித் தொகை விசாரணை முடிந்த பிறகு வழங்கப்படும்.*

*வனத்துறை அதிகாரிகள் இறந்தவரின் உடலை பாதுகாப்பாக அவரது கிராமத்திற்கு எடுத்துச் சென்று இறுதிச் சடங்குகள் முடியும் வரையில் இருந்து திரும்புவார்கள் என தெரிவித்தார்.*


